முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## இறுதி நிலைப் பரீட்சை – 2012 ஜனவரி

## (60) உயர் நிதிக் கணக்கீடு

Advanced Financial Accounting

22-01-2012
காலை
[9.00 – 12.00]

**நேரம்: மூன்று (03) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 07
வினாக்களின் எண்ணிக்கை : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

(2) சகல செயல்முறைகளும் கணிப்புக்களையும் முன்வைக்க. உங்களால் மேற்கொள்ளப்பட்ட எடுகோள்கள் ஏதுமிருப்பின் தெளிவாகக் குறிப்பிடுக.

(3) **விடைகள் யாவும்** உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே ஒரு மொழியிலேயே எழுதப்பட வேண்டும்.

(4) கணிப்பான்கள் பயன்படுத்துதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(5) மொத்தம் 100 புள்ளிகள்.

---

01. பொது வரையறுக்கப்பட்ட சோடியம் கம்பனி **PLC** யினது 2011 மார்ச் 31 திகதியன்றான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

**2011 மார்ச் 31 திகதியன்றான பரீட்சை மீதி** *(Rs.'000)*

| | Dr | Cr |
|---|---|---|
| **குறிப்பிட்ட மூலதனம்** | | |
| சாதாரண பங்குகள் (800,000 பங்குகள்) | | 12,000 |
| பொது ஒதுக்கம் | | 5,330 |
| கைகொள் வருமானம் 2010 ஏப்ரல் 01 இல் | | 2,150 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்** | | |
| பொறி மற்றும் இயந்திரம் | 10,000 | |
| மோட்டார் வாகனம் | 5,450 | |
| அலுவலக உபகரணம் | 1,450 | |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 950 | |
| தேய்மான ஏற்பாடு – 2010 ஏப்ரல் 1 இல் | | |
| பொறி மற்றும் இயந்திரம் | | 2,400 |
| மோட்டார் வாகனம் | | 2,180 |
| அலுவலக உபகரணம் | | 870 |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | | 665 |
| ஐயக்கடனுக்கான ஏற்பாடு – 2010 ஏப்ரல் 1 இல் | | 975 |
| தொக்கு இருப்பு | 3,200 | |
| வியாபார வருமதிகள் / சென்மதிகள் மற்றும் அட்டுறு செலவுகள் | 19,800 | 7,770 |
| 14% வங்கிக்கடன் | | 3,650 |
| கைக்காசு மீதியும் வங்கி மீதியும் | 2,250 | |
| விற்பனைகளின் கிரயம் / விற்பனை | 34,815 | 54,950 |
| ஏனைய வருமானங்கள் | | 345 |
| வருமானவரிக் கொடுப்பனவு | 1,600 | |
| இடைக்காலப் பங்கிலாபக் கொடுப்பனவு | 800 | |
| நிர்வாகச் செலவுகள் | 7,350 | |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 4,600 | |
| தன்னிச்ச வட்டி | 150 | |
| ஏனைய நிதிச் செலவுகள் | 870 | |
| | **93,285** | **93,285** |

பின்வரும் மேலதிக தகவல்கள் தரப்பட்டுள்ளன.

(1) 2010 ஜுலை 1 இல் புதிய இயந்திரம் கொள்வனவு செய்யத் தேவையான நிதியைப் பெற ஒரு உரிமை வழங்கலும் தன்னிச்ச (தொகுதிக்கடன்) வழங்கலும் மேற்கொள்ளப்பட்டது.

(i) **உரிமை வழங்கல்:** தற்போதைய பங்குரிமையாளர் கொண்டுள்ள ஒவ்வொரு 5 பங்குகளுக்கும் ஒரு பங்கு வீதம் அதன் விலை ரூ.13 இற்கு வழங்கப்பட்டது.

(ii) **தன்னிச்சம் (தொகுதிக்கடன் வழங்கல்):** 20,000, 15% தன்னிச்சங்கள் ஒவ்வொன்றும் ரூ.100 இற்கு வழங்கப்பட்டுள்ளது. தன்னிச்ச வட்டி ஜனவரி 1 மற்றும் ஜுலை 1 ஆகிய தினங்களில் கொடுப்பனவு செய்யப்படும்.

ஊரிமை வழங்கல், தன்னிச்சம் வழங்கல் மூலம் 2010 ஜுலை 1 இல் பெறப்பட்ட பணம் காசு / வங்கிக் கணக்கில் மட்டும் பதிவு செய்யப்பட்டு பொது ஒதுக்கக் கணக்கில் செலவுப்பதிவு மட்டும் செய்யப்பட்டது. எல்லா பங்குரிமையாளர்களும் தங்கள் உரிமையைப் பிரயோகித்துள்ளார்கள். தன்னிச்ச வழங்கல் முழுமையாக நிதியீடு செய்யப்பட்டது.

(2) 2010 ஜுலை 1 இல் ரூ.7 மில்லியன் பெறுமதிக்கு புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. 2010 டிசம்பர் 1 இல் ரூ.240,000/- பெறுமதியான கணினி இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

(3) சொத்துக்களுக்கான தேய்மானம் நேர்கோட்டு முறையில் பின்வரும் விகிதங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | - | வருடத்திற்கு 10% |
| மோட்டார் வாகனம் | - | வருடத்திற்கு 20% |
| அலுவலக உபகரணம் | - | வருடத்திற்கு 20% |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | - | வருடத்திற்கு 10% |

(4) 2011 மார்ச் 31 அன்று அட்டுறு செலவுகள், முற்பணம், முற்கொடுப்பனவுகள் பின்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| **அட்டுறு செலவுகள்** | |
| மின்சாரம், நீர், தொலைபேசி | 41,500 |
| விற்பனைப் பணிசை | 16,500 |
| **முற்பணம் / முற்கொடுப்பனவுகள்** | |
| விளம்பரம் | 85,000 |
| பொறி, இயந்திரத்திற்கான காப்புறுதி | 36,000 |

(5) கணக்கு ஏடுகளில் ஊடுசெயல்கள் பதிவுசெய்யப்படும்போது பின்வரும் வழுக்கள் ஏற்பட்டுள்ளன.

(i) கட்டிட உரிமையாளருக்கு வழங்கிய திரும்பப்பெறும் வைப்புப் பணமான ரூ.300,000/- நிர்வாகச் செலவுகளுள் சேர்க்கப்பட்டுள்ளன.

(ii) அச்சுக்காகிதச் செலவு ரூ.32,000/- விற்பனை விநியோகச் செலவாகப் பதிவுசெய்யப்பட்டது.

(6) 2011 மார்ச் 31 இலான வங்கிக் கடன் மீதியில் 50% அடுத்த வருடத்தில் தீர்வு செய்யப்படும்.

(7) 2011 மார்ச் 31 இல் ரூ.500,000/- பெறுமதியான பொருட்கள் காசுக்குக் கொள்முதல் செய்யப்பட்டன. ஆனால் பொருட்கள் 2011 ஏப்ரல் 3 இல் களஞ்சியத்திற்கு விநியோகிக்கப்பட்டன.

(8) 2010/11 மதிப்பீட்டு வருடத்திற்கான வருமான வரிப்பொறுப்பு ரூ.1,800,000/- மதிப்பிடப்பட்டது.

(9) வருடத்தில் ரூ.800,000/- பெறுமதியான வருமதி பதிவழிப்புச் செய்யப்படல் வேண்டும். வருட முடிவில் உள்ள வருமதியாளர் மீதியில் 5% அறவிடமுடியாக்கடன் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(10) 2011 மே 25 இல் பணிப்பாளர்கள் சபை பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளது.

- அடுத்த வருடம் அலுவலகக் கட்டிடம் ஒன்று கொள்முதல் செய்வது
- பொது ஒதுக்கத்திற்கு ரூ.400,000/- மாற்றம் செய்தல்.
- 2011 மார்ச் 31 இல் உள்ளதான சாதாரண பங்குரிமையாளருக்கு பங்கொன்றுக்கு ரூ.2 வீதம் இறுதிப் பங்கிலாபமாகக் கொடுப்பனவு செய்தல்.

மேற்கூறப்பட்ட தகவல்கள் அடிப்படையில் சோடியக் **PLC** கம்பனிக்கு பிரசுரிப்புக்குப் பொருத்தமான முறையில் 2012 ஜனவரி 1 இல் அமுலுக்கு வரும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை இந்நிறுவனம் முன்னராகவே அமுல்படுத்தியது என்று கருதி, பின்வருவன வற்றைத் தயாரிக்கும்படி நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.

(a) 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான விரிவான வருமானக் கூற்று (Statement of Comprehensive Income) (10 புள்ளிகள்)

(b) 2011 மார்ச் 31 இல் அன்றான நிதிநிலைக்கூற்று (Statement of Financial Position) (10 புள்ளிகள்)

(c) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான குறிப்புகள் (07 புள்ளிகள்)

(d) 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றத்திற்கான கூற்று (Statement of changes in Equity) (03 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

**02.** (A) (a) ஒரு பங்குடமையைக் குலைப்பதற்கான காரணங்களை நிரற்படுத்துக.(02 புள்ளிகள்)

(b) "கார்ணர் எதிர் மறே" (Garner Vs Marray Rule) விதி பற்றி விளக்கம் தருக. (02 புள்ளிகள்)

(B) **மனோச், நுவான் மற்றும் ஜானக** ஆகிய மூன்று பேரும் 3 : 2 : 1 என்ற விகிதத்தில் இலாப / நட்டத்தைப் பகிரும் அடிபப்டையில் பங்குடமை ஒன்றில் ஈடுபட்டுள்ளார்கள். 2011 மார்ச் 31 இல் பங்காளிகள் பங்குடமையைக் குலைக்கத் தீர்மானித்துள்ளார்கள்.

2011 மார்ச் 31 இல் அன்று பங்குடமையின் நிதிநிலைமைக்கூற்று பின்வருமாறு :

**மனோச், நுவான் மற்றும் ஜானக பங்குடமை**

**2011 மார்ச் 31 இல் நிதிநிலைமைக்கூற்று (ஐந்தொகை)**

| | ரூ.'000 | ரூ.'000 |
|---|---|---|
| **சொத்துக்கள்**<br>**நடைமுறை சாராத சொத்துக்கள் (கிரயத்தில்)** | | |
| காணி | 6,100 | |
| கட்டிடம் | 4,650 | |
| பொறி மற்றும் இயந்திரம் | 5,925 | |
| மோட்டார் வாகனம் | 1,300 | |
| தளபாடம் | 930 | 18,905 |
| **நடைமுறைச் சொத்து** | | |
| தொக்கு இருப்பு | 634 | |
| வியாபார வருமதிகள் | 720 | |
| குறுகிய கால முதலீடு | 1,200 | |
| வங்கி மீதி | 861 | 3,415 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **22,320** |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்**<br>**மூலதனக் கணக்குகள்** | | |
| **மனோச்** | 6,400 | |
| **நுவான்** | 5,600 | |
| **ஜானக** | 950 | 12,950 |
| **நடைமுறைக் கணக்குகள்** | | |
| **மனோச்,** | 1,025 | |
| **நுவான்** | 1,040 | |
| **ஜானக** | (2,070) | (5) |
| **பொறுப்புக்கள்**<br>**நடைமுறை சாராத பொறுப்புக்கள்** | | |
| வங்கிக் கடன் | 3,960 | |
| கடன் - **மனோச்** | 1,300 | 5,260 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | |
| வியாபார சென்மதிகள் | 1,625 | |
| அட்டுறு செலவுகள் | 2,490 | 4,115 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | **22,320** |

பின்வரும் மேலதிக தகவல்கள் தரப்பட்டுள்ளன.

(1) ஜானக வகையற்றவராக (insolvent) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். மனோச் மற்றும் நுவான் ஆகிய இருவரும் இறுதியாக உடன்பட்ட மூலதன விகிதத்தில் ஜானகவின் பொறுப்புக்களைப் பொறுப்பெடுக்க இணங்கியுள்ளனர்.

(2) முன்கொண்டு செல்லும் ரூ.875,000/- பெறுமதியான பொறி, இயந்திரங்களை மனோச் என்பவர் ரூ.1,100,000/- மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் பெற்றுள்ளார். மோட்டார் வாகனம் நுவானால் ரூ.1,350,000/- மதிப்பீட்டுப் பெறுமதியில் பெறப்பட்டது.

(3) நடைமுறைசார் ஏனைய சொத்துக்கள் பின்வரும் வகையில் கைக்குத் தேறியுள்ளன.

| | ரூ. |
|---|---|
| காணி, கட்டிடம் | 13,390,000/- |
| பொறி, இயந்திரம் | 5,100,000/- |
| தளபாடம் | 880,000/- |

(4) தொக்கு இருப்பில் 10% காலத்தைக் கடந்ததாகக் காணப்பட்டது. மிகுதித் தொக்கு ரூ.590,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது.

(5) வியாபார வருமதிகளில் ரூ.690,000/- மட்டும் அறவிடப்பட்டது. மிகுதி அறவிடமுடியாத கடனாகக் கொள்ளப்பட்டது. வியாபாரச் சென்மதிகளும் மற்றைய பொறுப்புக்களும் முழுமையாகத் தீர்வு செய்யப்பட்டன.

(6) குறுங்கால முதலீட்டில் ரூ.800,000/- பெறுமதி கொண்ட முதலீட்டை கடன் பகுதிக் கொடுப்பனவாக மனோச்சுக்குக் கொடுக்கப்பட்டது. மிகுதிக்கடன் காசு கொடுத்துத் தீர்க்கப்பட்டது. மிகுதி முதலீடுகள் சந்தைப் பெறுமதியில் ரூ.695,000/- இற்கு தேறியது.

(7) பங்குடமையின் குலைப்புச் செலவு ரூ.66,000/- .

**மேற்கூறிய தகவல்கள் அடிப்படையில் பங்குடமையின் பின்கூறப்படும் கணக்குகளைத் தயாரிக்கவும்.**

(a) தேறுதற் கணக்கு (Realization Account)

(b) காசேடு (Cash Book)

(c) பங்காளிகளின் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்குகள் வரிசை (columnar) அமைப்பில்.

(14 புள்ளிகள்)
(மொத்தம் 18 புள்ளிகள்)

**03.** (மட்) றன்தறு நிறுவனம் கிளை ஒன்றைக் காலியில் செயற்படுத்திய அதேவேளை தலைமை அலுவலகம் கொழும்பில் இயங்கியது. 2011 மார்ச் 31 இல் தலைமை அலுவலகம் மற்றும் கிளை ஆகியவற்றின் பரீட்சை மீதி பின்வருமாறு.

**2011 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| | தலைமை அலுவலகம் (கொழும்பு) | | கிளை (காலி) | |
|---|---|---|---|---|
| | வரவு | செலவு | வரவு | செலவு |
| குறிப்பிட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் (1,100,000 பங்குகள்) | - | 11,000 | - | - |
| - முன்னுரிமைப் பங்குகள் (230,000 பங்குகள்) | - | 2,300 | - | - |
| 2010 ஏப்ரல் 1 இல் கைக்கொள் வருமானம் | - | 6,337 | - | - |
| **நடைமுறை சாராத சொத்துக்கள் (கிரயத்தில்)** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் இயந்திரம் | 17,980 | - | 7,205 | - |
| 2011 மார்ச் 31 இல் திரட்டிய தேய்மானம் | | | | |
| ஆதனம், பொறி மற்றும் இயந்திரம் | - | 13,282 | - | 3,950 |
| வியாபார வருமதிகள் | 14,362 | - | 7,197 | - |
| வியாபார சென்மதிகள் | - | 4,178 | - | 877 |
| 12% நெடுங்காலக் கடன் | - | 1,084 | - | - |
| குறுங்கால முதலீடுகள் | 3,100 | - | - | - |
| தொக்கு இருப்புக்கள் 2010 ஏப்ரல் 1 இல் கிரயத்தில் / விற்பனைப் பட்டியல் விலையில் | 1,650 | - | 174 | - |
| கொள்வனவுகள் | 10,522 | - | - | - |
| விற்பனைகள் | - | 18,170 | - | 9,279 |
| கிளைக்கு அனுப்பிய பொருட்கள் / கிளையில் பெற்ற பொருட்கள் | - | 3,460 | 3,398 | - |
| தலைமை அலுவலக நடப்புக் கணக்கு | - | - | - | 6,300 |
| கிளை நடப்புக் கணக்கு | 6,410 | - | - | - |
| நிர்வாகச் செலவுகள் | 3,668 | - | 1,087 | - |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 1,427 | - | 755 | - |
| நிதிக் கட்டணம் | 390 | - | - | - |
| முதலீட்டு வருமானம் | - | 169 | - | - |
| தொக்கு மீதான தேறாத இலாப ஏற்பாடு | - | 29 | - | - |
| வங்கி மீதி | 500 | - | - | - |
| கைக்காசு | - | - | 590 | - |
| **மொத்தம்** | **60,009** | **60,009** | **20,406** | **20,406** |

வழங்கப்பட்ட மேலதிக தகவல்கள் பின்வருமாறு :

(1) கிளையில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் யாவும் தலைமை அலுவலகத்தால் கிரயத்தில் 20% ஆதாயம் சேர்த்து பட்டியலிடப்பட்டு வழங்கப்பட்டது.

(2) 2011 மார்ச் 31 இல் இறுதித் தொக்கு இருப்பு பின்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| தலைமை அலுவலகம் (கிரயத்தில்) | 870,000/- |
| கிளை (பட்டியலிட்ட விலையில்) | 394,000/- |

(3) 2011 மார்ச் 31 இல் தலைமை அலுவலகத்திலிருந்து கிளைக்குப் பட்டியலிடப்பட்ட ரூ.62,000/- பெறுமதியான பொருட்களும் கிளையினால் அனுப்பப்பட்ட பணம் ரூ.48,000/- இடைவழியிலுள்ளது. (in transit)

(4) வருட முடிவு வியாபார வருமதியாளர் மீதியில் 5% அறவிடமுடியாக் கடனுக்கான பொது ஏற்பாடாக ஏற்பாடு செய்யப்படும்.

(5) வருடத்திற்கான வருமானவரி பொறுப்பு ரூ.669,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

**நீங்கள் தயாரிக்குமாறு தேவைப்படுத்தப்படுவது,**

(a) 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான தலைமை அலுவலகம், கிளை, முழு நிறுவனம் சம்பந்தமான வருமானக்கூற்று வரிசை அமைப்பில் (in columnar form)

(b) தலைமை அலுவலக நடைமுறைக் கணக்கு கிளையின் கணக்கு ஏட்டிலும் கிளையின்

நடைமுறைக் கணக்கு தலைமை அலுவலக கணக்கு ஏட்டிலும்.

(c) 2011 மார்ச் 31 இலான முழு நிறுவனத்தின் நிதிநிலைமைக் கூற்று. (15 புள்ளிகள்)

**04.** (A) "திரட்டிய நிதி" என்பதை விளக்குவதுடன் திரட்டிய நிதியினுள் உள்ளடக்கப்படும் காசுகள் வகை மூன்றினை (03)உதாரணமாகத் தருக. (05 புள்ளிகள்)

(B) பொதுத் திறைசேரியின் செயற்பாடுகள் ஐந்தினை (05) நிரற்படுத்துக. (05 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

**05.** (A) காசுப்பாய்ச்சல் கூற்றுக்களைத் தயாரிப்பதில் ஏற்படும் நான்கு (04) அனுகூலங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(B) (மட்டு) சோபனா நிறுவனத்தின் 2011 மார்ச் 31 இலும் 2010 மார்ச் 31 இல் முடிவடைந்த வருட விரிவுபட்ட வருமானக் கூற்றுக்களும் கீழே தரப்பட்டுள்ளன.

**(மட்) சோபனா**
**நிதிநிலைமைக் கூற்று (ஐந்தொகை)** *(Rs.'000)*

| | 2011 மார்ச் 31 இல் அன்று | | 2010 மார்ச் 31 இல் அன்று | |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்**<br>**நடைமுறைசாராத சொத்துக்கள்**<br>**ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** | | | | |
| பொறி மற்றும் இயந்திரம் | 26,500 | | 26,500 | |
| கழி : திரட்டிய தேய்மானம் | (10,600) | 15,900 | (5,300) | 21,200 |
| மோட்டார் வாகனம் | 2,000 | | 3,000 | |
| கழி : திரட்டிய தேய்மானம் | (1,000) | 1,000 | (1,250) | 1,750 |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 1,500 | | 1,500 | |
| கழி : திரட்டிய தேய்மானம் | (450) | 1,050 | (300) | 1,200 |
| | | 17,950 | | 24,150 |
| முதலீடுகள் | | 2,500 | | 850 |
| | | 20,450 | | 25,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| தொக்க இருப்பு | 3,897 | | 2,525 | |
| வியாபார வருமதியாளர்கள் | 13,760 | | 14,000 | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 1,300 | 18,957 | 1,420 | 17,945 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **39,407** | | **42,945** |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்**<br>**உரிமையாண்மை** | | | | |
| குறிப்பிட்ட மூலதனம் - சாதாரண பங்கு மூலதனம் | | 17,675 | | 17,675 |
| கைகொள் ஆதாயம் | | 7,027 | | 2,560 |
| | | **24,702** | | **20,235** |
| **நடைமுறைசாரா பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிக் கடன் | | 5,000 | | 8,000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| வியாபார சென்மதிகள் | 6,345 | | 10,340 | |
| அட்டுறு செலவினங்கள் | 1,100 | | 2,300 | |
| செலுத்த வேண்டிய வரி | 1,425 | | 1,520 | |
| செலுத்த வேண்டிய கடன் வட்டி | 835 | 9,705 | 550 | 14,710 |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | **39,407** | | **42,945** |

**(மட்) சோபனா**

**2011 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான விரிவுபட்ட வருமானக் கூற்று**

| | ரூ.'000 | ரூ.'000 |
|---|---|---|
| விற்பனைகள் | | 105,000 |
| விற்பனைக் கிரயம் | | (61,958) |
| **தேறிய இலாபம்** | | **43,042** |
| | | |
| **ஏனைய வருமானம்** | | |
| முதலீட்டு வருமானம் | 287 | |
| மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபம் | 125 | 412 |
| | | **43,454** |
| **கழி : செலவுகள்** | | |
| விநியோகச் செலவுகள் | 14,000 | |
| நிர்வாகச் செலவுகள் | 20,137 | |
| நிதிச் செலவுகள் | 1,650 | 35,787 |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | | 7,667 |
| வரி | | (3,200) |
| **வரிக்குப் பின்னரான தேறிய இலாபம்** | | **4,467** |

பின்கூறப்படும் மேலதிக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(1) 2007 ஏப்ரல் 1 இல் ரூ.1,000,000/- இற்கு கொள்முதல் செய்யப்பட்டத. மோட்டார் வாகனத் தேய்மான விகிதம் நேர்கோட்டு முறையில் 25%.

(2) இவ்வருடத் தேய்மானம் ரூ.5,950,000/-.

(3) இவ்வருடம் கம்பனியானது ரூ.1,650,000/- ஐ திறைசேரி பிணைமுறியில் 5 வருட காலத்திற்கு முதலீடு செய்துள்ளது.

**(மட்) சோபனா நிறுவனத்தின் காசுப்பாய்வுக் கூற்றை நேரடி முறையில் (<u>direct method</u> தயாரிக்கும்படி கோரப்பட்டுள்ளீர்கள்.** (15 புள்ளிகள்)

(மொத்தம் 17 புள்ளிகள்)

**06.** (A) வியாபாரத் தீர்மானங்கள் எடுக்கும் செயற்பாட்டில் கணக்கீட்டு விகிதாசாரங்களை (Accounting ratios) உபயோகிக்கும்போது காணக்கூடிய மூன்று (03) மட்டுப்படுத்தல் களைக் கூறுக. (03 புள்ளிகள்)

(B) மூன்று (03) ஆதாயம்சார் விகிதாசாரங்களையும் மூன்று (03) முதலீட்டு விகிதாசாரங்களையும் கூறுக. (03 புள்ளிகள்)

(C) மிக்கி குத்தகைக் கம்பனி **PLC** டொனால்ட் கம்பனிக்கு 2010 ஏப்ரல் 1 ஆம் நாள் ஒரு இயந்திரத்தைக் குத்தகை அடிப்படையில் பெற நிதி வழங்கியுள்ளது. குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இயந்திரத்தின் கிரயம் (நியாய விலை) | ரூ.3,250,000/- |
| குத்தகைக் காலம் | 5 வருடங்கள் |
| ஆரம்ப வைப்புத்தொகை | Rs.650,000/- |
| வருடத் தவணைப்பணப் பெறுமதி | ரூ.869,362/- (வருட முடிவில் செலுத்த வேண்டியது) |
| வட்டி விகிதம் | வருடம் 20% |

2011 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான டொனால்ட் கம்பனியின் கணக்கேடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஊடு செயல்கள் தொடர்பான கணக்கீட்டுப் பதிவுகளைத் தரும்படி கேட்கப்பட்டுள்ளீர்கள். (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

– o0o –